# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறுதிப் பரீட்சை 2020

ஆண்டு: 3 விசேட வகுப்பு திகதி: 21/11/2020

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி பிரியதர்ஷினி இளங்கோவன்

மாணவர் பெயர்: _______________________________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 25 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 10 | |
| வினா 7 | 25 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 25 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**கதையை வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

## எறும்பும் வெட்டுக்கிளியும்

மதிய வெயில் நேரத்தில் வெட்டுக்கிளி ஒன்று இங்கும் அங்கும் குதித்து பாட்டுப்பாடி ஆடிக்கொண்டிருந்தது.




அப்போது எறும்பு ஒன்று அரிசி ஒன்றை எடுத்துக்கொண்டு அதே பாதையில் தன் வீட்டிற்க்கு சென்று கொண்டிருந்தது. அதைப் பார்த்த அந்த வெட்டுக்கிளி எறும்பிடம் “இப்போது என்ன அவசரம். சிறிது நேரம் என்னைப்போல நீயும் என்னுடன் விளையாடலாமே” என்றது.




அதற்கு எறும்பு “இன்னும் சில நாட்களில் வெயில் காலம் முடிந்து, மழைகாலம் தொடங்கபோகிறது. மழைக்காலத்தில் எவரும் வெளியே செல்லமுடியாது. அதனால் அந்த நேரத்திற்குத் தேவையான உணவை இப்போது இருந்தே நான் என் வீட்டில் சேகரித்து வைத்துக்கொள்கிறேன்” என்றது.




வெட்டுக்கிளி எறும்பிடம் “மழைக்காலம் வர இன்னும் நாட்கள் இருக்கிறது, நான் விளையாடச் செல்கிறேன்” என்று சிரித்துகொண்டே நடனமாடி சென்றது.

நாட்கள் கடந்தன. மழைக்காலமும் வந்தது.



தான் சேகரித்த உணவை உண்டு தன் வீட்டிலே எறும்பு இருந்தது. ஆனால் அந்த வெட்டுக்கிளிக்கோ உணவு ஏதும் கிடைக்காமல் உணவு தேடி மழையில் சுற்றித்திரிந்தது.




அப்போது வெட்டுக்கிளிக்கு "எறும்பு உணவு சேகரித்து வைத்து இருக்கும் அதனிடம் கேட்டுபார்க்கலாம்" என்ற எண்ணம் வந்தது.




வெட்டுக்கிளி எறும்பின் வீட்டிற்க்கு வந்து எறும்பிடம் "எனக்கு மிகவும் பசிக்கிறது. ஏதாவது உணவு கிடைக்குமா?" என்று கேட்டது.

தன்னிடமிருந்த சேகரித்த உணவில் இருந்து சிறிதளவை வெட்டுக்கிளியிடம் கொடுத்த எறும்பு. "அன்று என்னைப் பார்த்துச் சிரித்தாயே. இப்போது நான் சேகரித்த உணவு தான் இன்று நம் இருவருக்கும் உதவியது. இனி நீ எப்போதும் சோம்பலில்லாமல், வெயில் காலத்தில் மழைக்காலத்திற்கு வேண்டியதைச் சேமித்துக்கொள்" என்றது.




காலநேரம் பாராது உழைத்தால் வாழ்வு பிரகாசிக்கும் என்று வெட்டுக்கிளி உணர்ந்தது.

**நீதி**: கடின உழைப்பு உடனடியாகப் பலன் தராவிட்டாலும் என்றாவது ஒருநாள் கண்டிப்பாக பலன் தரும்.

**வினாக்களுக்கு விடை எழுதுக:**

1. இக்கதையில் எத்தனை மிருகங்கள் உள்ளன? அவை யாவை?

________________________________________

________________________________________

2. வெட்டுக்கிளி எறும்பிடம் பேசியது என்ன?

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

3. ஆங்கிலத்தில் பொருள் தருக.

- அவசரம் : ______________________________
- சோம்பல் : ______________________________

4. இறுதியில் வெட்டுக்கிளிக்கு நேர்ந்தது என்ன?

________________________________________

________________________________________

________________________________________

5. இக்கதையின் நீதி என்ன?

________________________________________

________________________________________

(5 X 5 = 25 புள்ளிகள்)

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**சேர்த்து எழுதுக.**

1. தேசம் + பற்று : ____________________
2. தமிழ் + ஓசை : ____________________
3. இமை + பொழுது : ____________________
4. நாடு + பற்று : ____________________
5. முழக்கம் + இடு : ____________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**பன்மைச் சொற்களைத் தருக.**

1. நாய் : ____________________
2. பூ : ____________________
3. மாடு : ____________________
4. மான் : ____________________
5. வளையல் : ____________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**தரப்பட்ட சொற்களுள் பொருத்தமானதை தேர்வு செய்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| துன்பம், | தீமை, | பகைவன், | மாலை, | பழையது |

1. நன்மை : ______________________________
2. புதியது : ______________________________
3. நண்பன் : ______________________________
4. இன்பம் : ______________________________
5. காலை : ______________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**ஒத்த ஓசை தரும் சொல் தருக.**

1. படி : ______________________________
2. உடை : ______________________________
3. எடு : ______________________________
4. பட்டம் : ______________________________
5. மாடு : ______________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

| வினா இல | 6 | புள்ளிகள் | 10 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**பொருத்தமான ஓர் எழுத்துச் சொல் தருக.**

1. மாதங்களில் ஒன்று ____________________________
2. பெண்கள் தலையில் சூடுவது ____________________________
3. நெருப்பு வேறு சொல் ____________________________
4. எடுத்ததை மீண்டும் அதே இடத்தில் ____________________________
5. எனக்கு கொடு ____________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

| வினா இல | 7 | புள்ளிகள் | 25 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| இருக்கிறது<br>இருக்கிறார்<br>இருக்கிறேன் | இருக்கிறோம்<br>இருக்கிறார்கள்<br>இருக்கிறீர்கள் | இருக்கிறதா<br>இருக்கிறேன் |

அன்புள்ள அம்மம்மா

நான் இங்கே நலமாக ____________________. நீங்கள் எப்படி ____________________. அம்மப்பா எப்படி ____________________. இங்கு நல்ல குளிராக ____________________. உங்கள் ஊரில் குளிர் ____________________?. அம்மாவும், அப்பாவும் நன்றாக ____________________. நாங்கள் விடுமுறையில் உங்களைப் பார்க்க ____________________. உங்களை பார்க்க மிகவும் ஆவலாக ____________________.

அன்புடன்
பேத்தி சாம்பவி

(25 புள்ளிகள்)